செ.கு. எண்: 52.

நாள்: 05/02/2012.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 5.2.2012

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், முத்துமுடி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெயக்குமார் என்பவரின் மகன் சிறுவன் ஜெரின் டொரினோ 3.2.2012 அன்று சிறுத்தை புலி தாக்கியதில், பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தான் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

சிறுத்தை புலி தாக்கியதில் அகால மரணமடைந்த சிறுவன் ஜெரின் டொரினோ குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான சிறுவன் ஜெரின் டொரினோவை இழந்துவாடும்அவர்தம் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

*வெளியீடு, இயக்குநர்*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*சென்னை-9*